நிலையும், போலீசார் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளுவதற்குச் சுட வேண்டிய நிலையும் ஏற்படுகிறது என்பது அரசுக்குத் தெரியுமா? அதுபோன்ற நிலையை இனியாவது தடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்படிப்பட்ட ஒரு காட்சி நண்பர் இராமமூர்த்தி அவர்களுக்குத் தெரிந்திருந்தால், அதைக் கூறினால், அதுபற்றி விசாரிக்கலாம்.

நெல்லிக்குப்பத்தில் தமிழர் படை ஊர்வலம்

*** 2 வினா.—திரு. சி. கோவிந்தராஜன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

15—5—1970-ல் நெல்லிக்குப்பத்தில் தமிழர் படை என்ற பெயரால் ஓர் ஊர்வலம் நடத்தப்பட்டதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 15—5—1970 அன்று நெல்லிக்குப்பத்தில் 'தமிழர் படை' என்ற பெயரால் ஊர்வலம் எதுவும் நடைபெறவில்லை.

திரு. சி. கோவிந்தராஜன் : 15—5—1970 அன்று நோட்டீஸ் போடப்பட்டது. 16-ம் தேதி ஊர்வலம் நடந்தது. தமிழர் படை என்ற பெயரால் ஊர்வலம் நடத்தப்பட்டபோது 'சட்டமன்ற உறுப்பினர் கோவிந்தராஜனை கைது செய்; மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுகளைக் கைது செய்' என்ற கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்தது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல் மே மாதம் 16-ம் தேதி நடைபெற்ற ஊர்வலம் தமிழர் படையால் நடத்தப்பட்டது அல்ல. நெல்லிக்குப்பத்தில் நக்சல்பாரி வாசகங்கள் ஒட்டப்பட்டதன் காரணமாக மார்க்சிஸ்ட் போக்கைக் கண்டிக்கும் வகையில் தி.மு.க.வைச் சேர்ந்த 400 பேர் ஊர்வலம் நடத்தினார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது.

திரு. சி. கோவிந்தராஜன் : நெல்லிக்குப்பத்தில் நக்சல்பாரியைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் யாரும் கிடையாது. அங்கே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைத் தாக்கவேண்டும் அல்லது அவர்களை அவமானப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த ஊர்வலம் தமிழர் படையால் நடத்தப்பட்டது. இப்படிப்பட்ட தமிழர் படையை ஊக்குவிக்க அரசாங்கம் இன்னும் தயாராக இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நக்சல்பாரிகளைச் சிலர் ஊக்குவிக்கலாம். தமிழர் படையை ஊக்குவிக்கும் எண்ணம் இந்த அரசுக்கோ, இந்த அரசை நடத்தும் கட்சிக்கோ இல்லை. தமிழர் படை என்ற ஒன்று தேவையில்லை என்று கூறி அந்தப் படை இப்போது கலைக்கப்பட்டு விட்டது.

1970 நவம்பர் 26]

திரு. எஸ். இராமச்சந்திரன் : செஞ்சேனை என்ற படை வைத்து அதன் மூலமாகவும் இத்தகைய காரியங்கள் நடைபெற்று வருகின்றன. அதற்கும் நக்சல்பாரிகளுக்கும் தொடர்பு இருக்கிறது என்பதை அறிந்து ஆங்காங்குள்ள பொதுமக்கள், தமிழ்ப் பெருமக்கள் அதைக் கண்டிக்கும் வகையில் இத்தகைய ஊர்வலங்களை நடத்துகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படிப்பட்ட தகவல்களும் அரசுக்கு வந்துகொண்டிருக்கின்றன.

உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்குத் தையல் தொழில் பயிற்சி

*** 3 வினா.—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உயர்நிலைப் பள்ளிகளில் தொழில் பாடப் பிரிவில் **(Craft)** ஆண்களுக்கும் தையல் தொழில் கற்றுக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தற்பொழுதுள்ள பாட முறையின்படியே 8, 9 வகுப்புகளில் படித்து வரும் மாணவ மாணவியருக்கு துணைத் தொழிற்பாடமாகத் தையல் தொழில் கற்றுக்கொடுக்க இடமுண்டு. போதுமான எண்ணிக்கையில் மாணவ மாணவியர் தையல் தொழில் கற்றுக்கொள்ள முன்வரும் பள்ளிகளிலெல்லாம் தையல் தொழில் கற்றுக்கொடுக்கலாம்.

திரு. இல. பலராமன் : இந்த மாணவர்களுக்கு அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்கள் என்னென்ன ? அது இந்த மாணவர்களின் வாழ்க்கைக்குப் பயன் அளிக்கிறது என்று அரசு கருதுகிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கைத்தொழில்கள் என்ற முறையில்— Drawing, Painting, gardening spinning and weaving, paper work, clay modelling, wood work, needle work, metal work
ஆகியனவும், பிறகு சப்சிடியரி தொழில்கள் என்ற வகையில் எட்டாவது, ஒன்பதாவது படித்தவர்களுக்கு— Tailoring, electric wiring, leather work, book-binding, clay modelling
ஆகியனவும் கற்றுத்தரப்படுகின்றன.

திருச்சிராப்பள்ளியில் பல்கலைக் கழகப் பிரிவு

*** 4 வினா.—திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளியில் பல்கலைக்கழகப் பிரிவு (University Centre) ஏற்படுத்தத் தமிழ்நாடு அரசு உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆமெனில், எந்த இடத்தில் துவக்க உத்தேசித்துள்ளது ?